

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஃபெஞ்சல் புயல் கனமழை காரணமாக திருவண்ணாமலை மலையடிவாரத்தில் உள்ள வ.உ.சி நகரில் மண் சரிவு ஏற்பட்டு உயிரிழந்த ஏழு நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5 இலட்சத்திற்கான நிவாரண தொகையினை வழங்குவதற்கு ஆணை பிறப்பித்ததை தொடர்ந்து, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (05.12.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களிடம் ரூபாய் 5 லட்சம் நிவாரணத் தொகை பெறுவதற்கான ஆணையினை வழங்கினார்கள். இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன், மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் எ.வ.வே.கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் சிறந்த நிர்வாகத் திறனால்

# இயல்புநிலையை மீட்டெடுப்பதில் அரசு சிறப்பாக செயல்படுகிறது!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அறிக்கை!



சென்னை, டிச.06

முதலமைச்சர் அவர்களின் மிகச்சிறந்த நிர்வாகத் திறனால் இயல்புநிலையை மீட்டுக் கொண்டு வருவதில் தி.மு.க. அரசு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்த போதும், புயல், மழை, வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பின்னால் நின்றது. இரவு பகலென்று பாராமல் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொண்டது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிவாரண உதவிகளை தி.மு.க. வினர் வழங்கினார்கள். கொரோனா பொது முடக்கத்தில் வாழ்வாதாரங்களை மக்கள் இழந்து நின்ற போது அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் கட்டளையை ஏற்று, ‘ஒன்றிணைவோம் வா’ என்ற இயக்கத்தை நடத்தி நிவாரண உதவிகளை தமிழ்நாடு முழுவதும் செய்தோம்.

உதவிகள் வழங்குவதில் ஓடோடி வரும் தி.மு.க., ஆட்சியில் இருக்கும் போது அதைவிட அதிகமாகவே நிவாரண உதவிகளையும் மீட்பு பணிகளையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு செய்து கொண்டிருக்கிறது. மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு அமைந்த பிறகு பேரிடர்களை எப்படி சிறப்பாக எதிர்க் கொண்டு செயல்பட்டது என்பதற்கு வரலாற்றுத் தடங்கள் உள்ளன. 2021-ல் ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே கொரோனா பாதிப்பை மிகச் சிறப்பாக சமாளித்து வெற்றிக் கண்டது. 2023 டிசம்பரில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களைத் தாக்கிய மிக்ஜாக் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பணிகளை தி.மு.க. அரசு சிறப்பாக செய்தது.

ஒன்றிய அரசிடம் பேரிடர் நிவாரண உதவி கேட்டும் கிடைக்காத நிலையில், மிக்ஜாக் புயலால் பாதிக்கப்பட்ட 32,23,138 குடும்பங்களுக்கு ரூ.1933.88 கோடி நிவாரண தொகையை தமிழ்நாடு அரசு வழங்கியது. தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்கள் வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது அமைச்சர்கள், அதிகாரிகள் ஓடோடிச் சென்று தேவைப்படும் நிவாரண உதவிகளைச் செய்தார்கள். அதிகமாகப் பாதிக்கப்பட்ட 6,63,760 குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 6,000 ரூபாய் வீதமும், ஓரளவு பாதிக்கப்பட்ட 14,31,164 குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும், தலா ரூபாய் 1,000 வீதமும் நிவாரணத் தொகையாக 144.12 கோடி ரூபாயை மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு வழங்கியது.

தற்போது ஃபெஞ்சல் புயல் எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் தெரிவித்த நேரத்தில் இருந்து இன்று வரையில் ஓயாமல் செயல்பட்டு கொண்டிருக்கிறது தி.மு.க. அரசு. முதலமைச்சர் அவர்களின் மிகச்சிறந்த நிர்வாகத் திறனால் (Administrative Skills) புயலுக்கு முன்பே திட்டமிட்டு, அனைத்து தரப்பையும் தயார்நிலையில் வைத்து, அரசு எந்திரத்தை முடுக்கிவிட்டு, பாதிக்கப்பட்டவர்களை மீட்டு மிக விரைவாக இயல்புநிலையை மீட்டுக் கொண்டு வருவதில் தி.மு.க. அரசு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மாநில அவசரகால பேரிடர் மையத்தில் முதலமைச்சர் நேரில் ஆய்வு, அதிகாரிகள், மாவட்ட கலெக்டர்களுடன் ஆலோசனைக் கூட்டம், பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் க.பொன்முடி, எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், வி. செந்தில் பாலாஜி, எஸ்.எஸ்.சிவசங்கர், சி.வெ.கணேசன் ஆகியோரை உடனடியாக அனுப்பியது. தி.மு.க. வார் ரூமில் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கியது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்க ஏற்பாடு செய்தது. பாதிக்கப்பட்ட சென்னை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களுக்கு முதலமைச்சரே நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியது, மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை களத்திற்கு அனுப்பியது, மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி பணிகளை முடுக்கி விட்டது என தொடர்ந்து நிவாரண பணிகளை மேற்கொண்டு வருகிறது திராவிட மாடல் அரசு.

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 2,000 கோடி ரூபாய் வழங்குமாறு ஒன்றிய அரசுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண நிதியை அறிவித்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

அரசு இயந்திரம் மட்டுமல்லாது தி.மு.க. தொண்டர்களையும் களத்தில் இறக்கி புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் இடர்ப்பாடுகளை போக்க தலைமைத் தளபதியாக நின்று செயல்பட்டு வருகிறார் முதலமைச்சர் அவர்கள். தி.மு.க. நிர்வாகிகளும் களத்தில் இறங்கி மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார்கள்.

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு தி.மு.க. சார்பில் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்க முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்த நிலையில் அரியலூர் மாவட்டத்தின் சார்பில் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் இதுவரையிலும் 25,000 உணவுப் பொட்டலங்களை விக்கிரவாண்டி தொகுதியில் விநியோகித்துள்ளார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் சார்பில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் 1 லட்சம் கிலோ அரிசியை அனுப்பினார். சென்னை தெற்கு மாவட்டத்தின் சார்பில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் ஏற்பாடு செய்துள்ள 1.5 லட்சம் கிலோ அரிசி மூட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், அ.தி.மு.க. உள்ளிட்ட சில எதிர்க் கட்சிகள் பேரிடரிலும் அரசியல் செய்து கொண்டிருக்கின்றன. அ.தி.மு.க. ஆட்சியில் 2005 டிசம்பர் மாதத்தில் சென்னையில் ஏற்பட்ட பெருமழையின்போது நிவாரண உதவி வழங்குவதாக அறிவித்து, எந்தவித திட்டமிடுதலும் இல்லாமல், சென்னை அசோக் நகர் பள்ளி முன் திரண்ட பொது மக்கள் கூட்ட நெரிசலில் மிதிபட்டு 42 பேர் உயிரிழந்ததையும், வியாசர்பாடியிலும் 6 பேர் உயிரிழந்த அவலத்தையும் மறக்க முடியுமா?.

அதே போன்று, 2015-ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சியில், செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்து விடுவதில் காலம் தாழ்த்தி, எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் திறந்துவிட்டதால், சென்னை மாநகரம் மூழ்கி வெள்ளத்தில் 289 பேர் பலியானார்கள். 23.25 லட்சம் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்புகள் முற்றிலும் துண்டிக்கப் பட்டன. அப்போது அ.தி.மு.க. அரசு நிவாரணப் பணிகளில் காட்டிய அலட்சியம் கடும் விமர்சனத்துக்கு உள்ளானது. அதனை அன்றைக்கு பத்திரிகைககள் கண்டித்தன. தன்னார்வலர்களும், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் அளித்த நிவாரண பொருட்களில் எல்லாம் முதல்வர் ஜெயலலிதாவின் படத்தை போட்டு அ.தி.மு.க. ஸ்டிக்கர்கள் ஒட்டி அடாவடித்தனத்தை தமிழ்நாட்டு மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அத்தகைய காட்சிகளோடு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் மக்கள் நலன் நாடும் தொண்டுகளை எல்லாம் நினைவு கூர்ந்து ஒப்பிட்டு, முதலமைச்சர் அவர்களை மக்கள் பாராட்டுவதை பொறுக்க முடியாமல்தான் அவதூறுகளை அள்ளி வீசுகிறார்கள். மக்களின் மனங்களை வெல்லும் இயக்கும் தி.மு.க. அதை இறுதி மூச்சு வரை செய்து கொண்டே இருக்கும் திராவிட மாடல் அரசு.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், நேற்று (5.12.2024) சென்னை எழும்பூரில் உள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை அலுவலகத்தில் நடைபெற்று வரும் கட்ட புனரமைப்புப் பணிகள், நவீன தொழில்நுட்பமான ஜப்பான் திசு முறையைப் பயன்படுத்தி நடைபெறும் ஆவணங்கள் செப்பனிடுதல் பணிகள் மற்றும் ஆவணங்கள் மின்னுருவாக்கம் செய்யும் பணிகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது உயர் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், ஆவணக் காப்பகத்தின் உதவி ஆணையர் ப.விஜயராஜா, பதிப்பாசிரியர் அ.தமிழ்ச்செல்வன், உதவி பதிப்பாசிரியர் அ.வெண்ணிலா மற்றும் ஆவணக் காப்பக அலுவலர்கள் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க இரண்டு நாள் சுற்றுப்பயணமாக இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**06/12/2024 வெள்ளிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 11:00 மணி | இராணிப்பேட்டை மாவட்டத்துக்கான ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்குதல். | சி.எஸ்.ஐ. சர்ச் அருகில், இராணிப்பேட்டை. |
| மதியம் 12:00 மணி | இராணிப்பேட்டை மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஜி.கே. ரெசிடென்சி, இராணிப்பேட்டை. |
| மாலை 05:00 மணி | வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் அரசு திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம். | ஆட்சியர் அலுவலகம், வேலூர். |

**07/12/2024 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | ‘தி இந்து’ குழுமம் மற்றும் நறுவீ மருத்துவமனை இணைந்து மேற்கொள்ளும் பொதுநல முன்னெடுப்புத் தொடக்க விழா. | நறுவீ மருத்துவமனை, வேலூர். |
| காலை 11:00 மணி | வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்குதல். | முத்தமிழறிஞர் கலைஞர் விளையாட்டு மைதானம், வி.ஐ.டி. கல்லூரி பின்புறம், வேலூர் |
| மதியம் 12:00 மணி | வேலூர் மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | சாந்தி மஹால், க்ரீன் சர்க்கிள் அருகில், வேலூர். |
| மதியம் 2:30 மணி | மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா | மேல்விஷாரம், இராணிப்பேட்டை. |
| மதியம் 03:00 மணி | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புதிய வகுப்பறைகள் திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |
| மதியம் 03:20 மணி | நகராட்சிப் பேருந்து நிலையம், பயணியர் நிழற்குடை, பள்ளி புதிய வகுப்பறைகள் திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |
| மதியம் 03:45 மணி | நகராட்சிப் பூங்கா திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 05-12-2024



### திருவல்லிக்கேணி - 119வது வட்டத்தில் க.வே. மோகன் தலைமையில்

# துணை முதல்வர் பிறந்த நாள்: 1047 பேருக்கு நல உதவிகள்!

## தயாநிதி மாறன் - நே.சிற்றரசு - இராஜீவ் காந்தி - பேரரசன் சிறப்புரை!

சென்னை, டிச.6-

சென்னை மேற்கு மாவட்டம் - திருவல்லிக்கேணி பகுதி 119-வது வட்டக் கழகம் சார்பில் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1047 பேருக்கு நல உதவிகள் வழங்கும் விழா நாளை (07.12.2024, சனிக்கிழமை), இராயப்பேட்டை, வி.எம். தெருவில் (பெரியார் சிலை அருகில்) நடைபெறுகிறது.

119வது வட்டச் செயலாளர் க.வே.மோகன் தலைமையில், திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி., மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, தலைமை பொதுக்குழு உறுப்பினர் வே.கமலா செழியன் எம்.சி. ஆகியோர் முன்னிலையில், டாக்டர் சுபேர்கான், வி.என். ராஜன், ரவிராஜ்குமார், கே. திருநாவுக்கரசு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., மாணவர் அணி தலைவர் - தலைமை கழக பேச்சாளர் இரா. ராஜீவ் காந்தி, தலைமை கழக பேச்சாளர் பேரரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்த விழாவில் மாவட்ட கழக நிர்வாகிகள் து. விக்டர், வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, வி.பி.பொன்னரசு, வழக்கறிஞர் ப.பிரகாஷ், ஏ.விஜயராஜ், பி. இளம்பாரதி, எம்.கே. ஆனந்த், வி.ஆர்.விஜய், ச. அசோக்குமார், வே.தேவேந்திரன், எஸ்.யோகேஸ்வரி, டாக்டர் அபிஷ்வுல்லா, பகுதி கழக நிர்வாகிகள் ம.தயாநிதி, ஆர்.பத்மாவதி, சி.தினகரன், எம்.பிரேம் ராஜா, ஆர்.மங்கை ராஜ்குமார் எம்.சி., வட்ட செயலாளர்கள் ஐ.சி.எப். சங்கர், ஜெ.விஜயகுமார், லைனர் கே.பிரபு, என்.ரவி, எஸ்.சசிகுமார், கே.ஜி.செந்தில், மாவட்ட பிரதிநிதிகள் எம். கலில்ரகுமான், மா.பச்சையப்பன், ஆர்.ராஜ்குமார், ஆர்.சசிகுமார், வெ.சீனிவாசன், ஆர்.கஜேந்திரன், எஸ். விஜயகுமார், எல். துளசிராமன், ஏ.பி.வேலு, டி.ஜெயக்குமார்,

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.கதிரேசன், வி.தினேஷ்குமார், எஸ்.ஏ.ரகுமான் செரிப், ஆர். ஷியாம்குமார், ஆர்.கணேசமூர்த்தி, எம்.மோகன், கே.ஜெகன், ஏ.செல்வம், பி.ராஜ்குமார், எஸ்.தீனதயாளன், எம்.கே.மூர்த்தி, ஏ.இராமன், எச்.தஸ்து, எஸ். ரவீந்திரன், எஸ்.ஜெயபிரகாஷ் (ஜாக்கி), வி.ராஞ்சித், தா.மதன்குமார், ஏ.பாபு, வி.கிருபாகரன், சென்னை செழியன், எஸ்.எச்.அப்துல் காதர், டி.சதீஷ்குமார், கே. சந்தோஷ், கு.குகவேலன், எம்.கோபி, டி.கபாலி, பா. ராஜ்குமார், புல்லட் எஸ். ஆர்.கணேசன், ந.சண்முகம், பி.சந்திரவேல், அ.ராஜேஷ், இ.முருகன், கே.தேசப்பன், சி.தேசப்பன், க.அ.ஜாபர் ஜலாலுதீன், வே.சௌந்தராஜன், அல்லூரி பி.சீனிவாசன், எம்.அஸ்வினி, வி. சாகுல் அமீது, ஆர்.பி.முத்து கிருஷ்ணன், ஆர்.சவீதா மற்றும் 119-வது வட்ட பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், 119-வது வட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொள்கிறார்கள்.

க.பாலாஜி, எஸ்.என். கபாலிதாசன், ஆர்.கோபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

விழாவில் கழக கொள்கை பரப்பு பாடகர் ஆசிப் இரயண்பன் இன்னிசை நடைபெறுகிறது.



சைதை மேற்கு பகுதி 142வது ”அ வட்டத்தில் கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவை சார்பில் நவம்பர் 27 உதயநிதியின் உதயநாள் விழாவை முன்னிட்டு பகுதி துணை அமைப்பாளர் ஆர். டி.மூர்த்தி தலைமையில் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர்கள் மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ். ஹரிபாபு முன்னிலையில் பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், கோதண்டம், எம்.நாகா, சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ். ஹரிபாபு ஆகியோர் வரவேற்பில் மாபெரும் தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைகழக சொற்பொழிவாளர் கோவை சம்பத், இளம்சொற்பொழிவாளர் எஸ்.திவ்யா, மாவட்ட அவை தலைவர் எஸ்.குணசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தின் முன்னதாக கலைமாமணி இசை முரசு டாக்டர் இறையன்பன் குத்தூஸின் மாபெரும் கழக இசை சை நிகழ்ச்சி நிகழ்ச் நடைபெற்றது. வட்டகழக நிர்வாகிகள் அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.